### முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கைக்கிணங்க

# கழக நிகழ்ச்சிகளுக்காக பேனர்கள், கட்அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது!

## கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வலியுறுத்தல்!



**சென்னை, டிச. 7 - முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழக நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் விடுத்த அறிக்கைக்கிணங்க கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் யாரும் கழக நிகழ்ச்சிகளுக்காக பேனர்கள், கட்அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது என்று கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தலைவராகப் பொறுப்பேற்ற நாள் முதல் "திராவிட முன்னேற்றக் கழக பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் எதிலும் பொது மக்களுக்கு சிரமம் கொடுக்கும் வகையிலும், போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்திலும் பேனர்கள், கட்அவுட்கள், பிளக்ஸ் போர்டுகள் வைக்கக்கூடாது என்று கழக நிர்வாகிகள் அனைவரையும் நான் ஏற்கனவே பல முறை அறிவுறுத்தியிருக்கிறேன். பொதுக் கூட்டம் அல்லது நிகழ்ச்சி நடக்கும் இடத்தில் ஒன்று அல்லது இரண்டு பேனர்கள் விளம்பரத்திற் காக உரிய அனுமதி பெற்று, பாதுகாப்பாக வைக்கலாமே தவிர, சாலை மற்றும் தெரு நெடுகிலும் இரு சக்கர வாகனம் உள்ளிட்ட அனைத்து வாகன ஓட்டிகளுக்கும் மக்களுக்கும் பேரிடர் ஏற்படும் வகையில் வைப்பதை என்னால் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அது அறவே நிறுத்தப்பட வேண்டும். எனவே, பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கழக நிகழ்ச்சிகளுக்காக பேனர்கள், கட்அவுட்கள், பிளக்ஸ் போர்டுகள் வைக்கக் கூடாது என்று மீண்டும் அறிவுறுத்த விரும்புகிறேன். இந்த அறிவுரையை யாரேனும் மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், நான் பங்கேற்கும் நிகழ்ச்சியாகவோ, கூட்டமாகவோ இருந்தால் அதில் நான் பங்கேற்க மாட்டேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். தலைமைக் கழக, மாவட்டக் கழக, ஒன்றிய, பேரூர், ஊராட்சி, வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் எனது இந்த அறிவுரையை கிஞ்சிற்றும் மீறாமல் கடைப்பிடித்து திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு கட்டுக்கோப்பான இயக்கம் என்பதை நிலைநாட்டிட வேண்டும் என்று மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்." என பேனர்கள், கட்அவுட், பிளக்ஸ் போர்டு வைக்கக்கூடாது என்பதனை வலியுறுத்தி அறிக்கைகள் வெளியிட்டார்.

கழகத் தலைவர் அவர்களின் மேற்சொன்ன அறிக்கையினை ஒரு சில இடங்களில் - ஒரு சிலர் பின்பற்றாத வகையில் நடந்து கொள்வதாக தலைமைக் கழகத்திற்கு தகவல்கள் வந்துள்ளன. இது கழகக் கட்டுப்பாட்டை மீறுகின்ற செயலாகும்.

எனவே, இனி வருங்காலங்களில், எந்தவொரு இடத்திலும் முதலமைச்சர் கழகத் தலைவர், துணை முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொள்ளும் கழகப் பொதுக்கூட்டங்கள், நிகழ்ச்சிகள் எதிலும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையிலும் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்திலும் பேனர்கள், கட்அவுட்கள், பிளக்ஸ் போர்டுகள் வைக்கக் கூடாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிவுரையை யாரேனும் மீறினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தலைமைக் கழகத்தின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கழக மாநில மருத்துவரணி சார்பில், மாநில மருத்துவரணி துணை செயலாளர் திலீப் ராஜகண்ணப்பன் ஏற்பாட்டில் மாபெரும் கட்டணமில்லா பொதுமருத்துவம் மற்றும் கண் சிகிச்சை முகாம் முதுகுளத்தூர் அரசு கலை அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது. இந்த கட்டணமில்லா கண் சிகிச்சை முகாம் முலமாக மேல்சிகிச்சைக்காக மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையில் (03.12.2024) 22 நபர்களுக்கு கண்புரை (cataracts) அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. கண்புரை (cataracts) அறுவை சிகிச்சை செய்யப்பட்ட பொது மக்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மற்றும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் கழக மாநில மருத்துவ அணி துணை செயலாளர் மருத்துவர் திலீப் ராஜகண்ணப்பனுக்கும் நன்றி தெரிவித்தனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு**

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க இரண்டு நாள் சுற்றுப்பயணமாக இராணிப்பேட்டை, வேலூர் மாவட்டங்களுக்கு செல்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

**07/12/2024 சனிக்கிழமை**

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10:00 மணி | ‘தி இந்து’ குழுமம் மற்றும் நறுவீ மருத்துவமனை இணைந்து மேற்கொள்ளும் பொதுநல முன்னெடுப்புத் தொடக்க விழா. | நறுவீ மருத்துவமனை, வேலூர். |
| காலை 11:00 மணி | வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்’ வழங்குதல். | முத்தமிழறிஞர் கலைஞர் விளையாட்டு மைதானம், வி.ஐ.டி. கல்லூரி பின்புறம், வேலூர் |
| மதியம் 12:00 மணி | வேலூர் மாவட்டக் கழக சார்பு அணி நிர்வாகிகளுடனான சந்திப்பு. | ஏ.எஸ்.குருசாமி மஹால், சேவூர், வேலூர் |
| மதியம் 2:30 மணி | மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா | மேல்விஷாரம், இராணிப்பேட்டை. |
| மதியம் 03:00 மணி | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:20 மணி | நகராட்சிப் பேருந்து நிலையம், பயணியர் நிழற்குடை, பள்ளி புதிய வகுப்பறைகள் திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |
| மதியம் 03:45 மணி | நகராட்சிப் பூங்கா திறப்பு விழா | வாலாஜா, இராணிப்பேட்டை. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 05-12-2024




